

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tirupathur
Date:2024.03.15 19:32:56

அளவர் / உதவி வரைவாளர் வரைவாளர் நிலை-III மேற்பார்வையாளர்

மாவட்ட நகர் ஊரமைப்பு துறை
திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், பெரியவரிக்கம் ஊராட்சி / கிராமம் சர்வே எண்கள் 204/1பி1 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்க்கான தொழில்நுட்ப வரைபடம்

இணையதள விண்ணப்பம் எண் : 43I4M8KU

அளவு : 1 : 500

குறிப்புகள்:

மனைப்பிரிவின் பரப்பு	:	8100.00 ச.மீ **or 2.00** ஏக்கர்
கோரிய மனைகள்	:	31 Nos
ஒதுக்கிய மனைகள்	:	30 Nos
மனைப்பிரிவின் எல்லை	:	
நிலையிலுள்ள சாலை	:	
மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை பரப்பு	:	2071.39 ச.மீ

மனைப்பிரிவின் மெத்த பரப்பு - உத்தேச சாலை பரப்பு

(8100.00 ச.மீ - 2071.39 ச.மீ) = 6028.61 ச.மீ

பொது ஒதுக்கீடு (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி :)

10% பூங்கா ஒதுக்கீட்டிற்கு : 606.28 ச.மீ ஒதுக்கப்பட்டுள்ளது. - 10.05%

: 6028.61 x 10% = **602.86** ச.மீ

பொது உபயோகம்(Public Purpose) : 44.40ச.மீ (1.47%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி :

பொது உபயோகம்-2 (TANGEDCO) : 43.0 ச.மீ (1.42%)

மூலை முடக்கு

7.2 மீ. முதல் 12.0மீ வரை அகல சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 18(ம) அரசாணை எண். 16 ,நகராட்சி நிரிவாகம்(ம) குடிநீர் வழங்கல் துறை , நாள்:04.02.2019 - ன் படி பூங்கா, சாலைகள் ஒதுக்கீடுகள் (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பாராமரிக்க வேண்டும் என்று நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுபொறுப்பு என்று தெரிவிக்கப்படுகிறது.
2. இம்மனைப்பிரிவிற்க்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆரஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆரஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கபட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்க்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழிலநுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்திரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. The Necessary Charges to be collected as per G.O.Ms.No. 79, Housing & Urban Development Department (UD4(3)), dt. 04.05.2017.
7. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
8. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை மின்வாரியமே பாராமரிக்க வேண்டும்.
9. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்:181 வீ.வ.(ம)ந.வ.-ன் நாள்.09.12.2020 -ல் தெரிவித்து கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
   Shall Collect the necessary fees and issue the final layout sketch permit of planning authoeity along with the permit of local body to the applicant (S) directly only after ensuring that the applicant lays tar roads provided other amenities like storm water drains water supply facilites by constructing required OHT provide necessary street lights etc. as per the standrds specified by the local body

சிறப்பு நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகைபத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொதுஅதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்தாரின், வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்க்கட்மாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

SWP/DTCP/TIRUPATHUR/LAYOUT NO:26/2024

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பத்தூர் மாவட்டம்